இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 148 | இதழ் : 14 | திகதி : 13.10.2024 | விலை : 50.00

# எமது அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கான புதிய திசைகளைத் தீர்மானிக்க வேண்டும்

### யாழ். கத்தோலிக்க மறைமாவட்டக் குருக்கள் ஒன்றியம் வேண்டுகோள்

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு யாழ்மறைமாவட்ட குருக்கள் ஒன்றியம் ஓர் ஊடக அறிக்கையை வெளியிட்டுள்ளது. ஒன்றியத்தலைவர் அருட்பணி சி.ம.ப.ஆனந்தகுமார் அடிகளாரின் ஏற்பாட்டுதலுடன் இவ்வறிக்கையானது " புதிய மாற்றத்தை வேண்டி" எனும் தலைப்பில் தமிழ் அரசியல் கட்சிகளை விழித்து எழுதப்பட்டுள்ளது. இவ் அறிக்கையானது நாம் ஓர் இனமாக வரலாற்றுப் பெரும் பாய்ச்சல் ஒன்றை மேற்கொள்ளவேண்டிய தருணத்தில் நிற்கிறோம். நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பின்னணியில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல், தமிழ் மக்கள் மத்தியில் பெருமாற்றத்திற்கான எதிர்பார்ப்புகளை தூண்டியிருக்கின்றன. சமகால அரசியல் கட்சிகளின் உடைவுப் போக்குகள், உட்கட்சிக் குழப்பங்கள், தீர்க்கமான அரசியல் தெளிவற்ற தன்மை போன்ற பல காரணிகளால் தமிழ் மக்களிடையே குழப்பங்களும், மன வேதனையும் நீடிக்கின்றன. இந்நிலை தொடருமானால் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கணிசமான அளவு தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தக்கவைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. "அனுர" எனும் அலையைத் தொடர்ந்து "மாற்றம்" என்பது மந்திரச்சொல்லாகப் பலராலும் உச்சரிக்கப்படுவதை அவதானிக்க முடிகின்றது. எனவே இந்த வரலாற்றுத் திருப்புமுனையில் நின்றுகொண்டு புதிய வியூகங்களை வகுக்க வேண்டியது எமது தார்மீக வரலாற்றுக் கடமையாக உள்ளது. வரலாற்றுச் சறுக்கலை மீண்டும் ஒருமுறை நிகழவிடாது **எமது அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்கால அரசியலுக்கான புதிய திசைகளைத் தீர்மானிக்க வேண்டும்.**

எம்மிடையே இருக்கும் பிளவுகள், வேற்றுமைகள், சாதி, சமய, பிரதேசவாதங்களைத் தாண்டி நகரவேண்டிய இடத்தில் வரலாறு எம்மை தற்போது நிறுத்தியுள்ளது. குறிப்பாக பாரம்பரிய அரசியல் பிரதிநிதிகள் புதிய அரசியல் போக்குக்கு இடம்விட்டு நகர்ந்து அர்ப்பணிப்புள்ள நேர்மையான ஊழலற்ற இளையோர்களை உள்வாங்கி வழிநடத்துவது ப.2

## தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவரங்கம்



யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தூது தனிநாயகம் நினைவரங்கம் 04 ஆம் திகதி யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கும் நிகழ்வுடன் மலரஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றன.

மலர் மாலைகளை யாழ் மறை மாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்க பெருந்தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களும் அணிவித்தார்கள். தொடர்ந்து மலரஞ்சலி நிகழ்வு அங்கு இடம்பெற்றது. அரங்க நிகழ்வுகள் யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்க உபத லைவர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் தலைமையில் நடைபெற்றன.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக் கழகக் கல்வியியற் துறை விரிவுரையாளர் திரு. சர்வேஸ்வரா அவர்கள் கலந்து 'இலங்கை ப்பல்கலைக் கழக முறைமையில் சேர். பொன் அருணாசலத்தின் ப.2

## மொன்பேட் துறவற சபை அருட்சகோதரர்களின் பணிவாழ்வு வைரவிழா மற்றும் வெள்ளிவிழா





இந்நியாவில் பணியாற்றும் ஏர்காடு மாகாண புனித கபிரியேல் மொன்பேட் துறவற சபை அருட்சகோதரர்களால் முன்னெடுக்கப்பட்ட பணிவாழ்வில் வைரவிழா மற்றும் வெள்ளிவிழா காணும் அருட்சகோதரர்களுக்கான யூபிலி நிகழ்வு 02ஆம் திகதி இந்தியாவின் ஏர்காட்டில் நடைபெற்றது. சபையின் ஏர்காடு மாகாண முதல்வர் அருட்தந்தை ஜோன்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் சேலம் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அருட்செல்வன் இராயப்பா அவர்களின் தலைமையில் திருப்பலியும் மாகாண முதல்வர்கள் மற்றும் பல்வேறு மாகாணங்களை சேர்ந்த குருத்துவ வெள்ளிவிழா காணும் அருட்சகோதரர்களுக்கான கௌரவிப்புக்களும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் மற்றும் கோட்டாறு மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை பீற்றர் றெமிஜியஸ் ஆகியோர் கலந்து வாழ்த்துச்செய்திகளை வழங்கினர்.

## வறுத்தலைவிளானில் புதிய ஆலயம் திறப்பு





33 வருடகால இடப்பெயர்வின் பின்னர் சொந்த இடம் போகமுடியாத நிலையில், 2017 வறுத்தலைவிளானில் குடியேற்றப்பட்ட 19 குடும்பங்கள் இணைந்து கட்டிய அற்புதக் குழந்தை இயேசு ஆலயத் திறப்பு விழா 10ஆம் திகதி யாழ் ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களினால் அபிஷேகம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. இது குளமங்கால் பங்கின் துணை ஆலயமாகும்.

## கூட்டொருங்கியக்கத் திரு அவையின் பண்புகளை நாடுகளின் தலைமைத்துவங்களும் பின்பற்ற வேண்டும்.

### புனித தெரேசாள் ஆலய வெள்ளிவிழா மறையுரையில் குரு முதல்வர்.




யாழ் றக்கா வீதியில் அமைந்துள்ள புனித தெரேசாள் ஆல யத்தினுடைய வெள்ளிவிழாத் திருப்பலி கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற

பொழுது அதனை தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்து மறை உரையாற்றிய யாழ் மறை மாவட்ட குரு முதல் வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார் கூட்டொருங்கிய திரு அவையின் பண்புகளாகிய எளிமை, தாழ்மை, தூய்மை, நேர்மை, சமத்துவம் ஆகிய பண்புகளை நாடுகளின் தலைமைத்துவங் களும் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். புனித குழந்தை இயேசுவின் தெரேசாள் உட்பட திரு அவையின் புனிதர்கள் அனைவருமே இப்பண்புகளை கடைப்பிடித்து வாழ்ந்ததினால் தான் புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டார்கள் என் பதையும் அவர் நினைவூட்டினார்.

ஆடம்பரங்களையும் கௌர வங்களையும் ஊழல்களையும் சம உரிமைகள் மறுக்கப்பட்டு புறக்கணிப்புகளையும் கடைப்பிடித்த கடந்த கால தலைமைத் துவங்களை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட அவர் புதிய தலைமைத்துவங்களில் கூட்டொருங்கி யகத் திரு அவையின் பண்புகள் கடைபிடிப்பதற்காக செபிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

## சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை திருத்தல வருடாந்த திருவிழா



தீவகம் சாட்டி புனித சிந்தாத் திரை அன்னை திருத்தல வருடாந்தத் திருவிழா திருத்தல ப் பரிபாலகர் அருட்தந்தை ஜெகன்குமார் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் 29 ஆம் திகதி நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும், நற்கருணை விழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## திருவுளப்பணியாளர் சபையின் இலங்கை மாகாண புதிய முதல்வர்



திருவுளப்பணியாளர் சபையின் இலங்கை மாகாண புதிய முதல்வராக அருட்தந்தை கொட்வின் கமிலஸ் (சணா) அவர்கள் கனடா நாட்டின் மொன்றியல் துறுவா ரிவேர்ஸ் இடத்திலுள்ள சபையின் முதல்வர் அருட்தந்தை மார்க் ஆந்திரே அவர்களினால் கடந்த 1ஆம் திகதி நியமிக்கப்பட்டு த்தனது பணிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அருட்தந்தை கொட்வின் அவர்கள் 2014 ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு மன்னார் வங்காலைப் பங்கின் உதவிப் பங்குத் தந்தையாகவும், பறப்பாங்கண்டல் பங்கின் பங்குத் தந்தையாகவும், கண்டி திருவுளப் பணியாளர் பெரிய குருட அதிபராகவும், யாழ்ப்பாணம் திருவுள பணியாளர் சிறிய குருமட அதிபராகவும், பதுளை மொனராகலைப் பங்கின் உதவிப் பங்குத் தந்தையாகவும், பதுளை மறைமாவட்ட பேராலய உதவிப்பங்குத்தந்தையாகவும் பணியாற்றியுள்ளார்.

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

## எமது எண்ணம்

### உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் நஷ்டஈடும் - பரிகாரம் எங்கே?

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பான நீதிவிசாரணை கோரிப் பல ஆண்டுகள் கடந்தும் இன்றுவரை உரிய குற்றவாளிகள் கைது செய்யப்படவுமில்லை சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுமில்லை. இந்த நிலையில் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் காயமடைந்தவர்கள் மற்றும் அங்கவீனமாக இருப்போருக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி இழப்பீட்டுக்கான அலுவலகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டு நிதி வழங்கப்பட்டுள்ளது.

இழப்பீடுகளுக்கான அலுவலகம் பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளின் பிரகாரம் இந்த நிதியை வழங்கி வருகிறது.

மொத்தத் தொகையான 311,000,000 ரூபாயில் 62,345,502 ரூபாய் இதுவரை வழங்கப் பட்டுள்ளது.

இந்தநிதிசத்திரசிகிச்சைசெலவுகள், குழந்தைகளின் கல்வி, நிரந்தர ஊனமுற்றோர் மற்றும் ஏனைய தேவைகளுக்குச் செலவிடப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதற்காக 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் திகதியன்று இழப்பீடு விநியோகத்தை உயர்நீதி மன்றம் மீள் ஆய்வு செய்யும்.

இந்நிலையில், அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி நிலந்த ஜயவர்தனவும் தனக்கு விதிக்கப்பட்டிருந்த தொகையை செலுத்தி நிறைவு செய்திருந்தார்.

மேலும், இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு இழப்பீடாக வழங்க உத்தரவிடப்பட்ட பெருந்தொகை நிதி எங்கிருந்து கிடைத்தது என்பது குறித்து தற்போது பல கேள்விகள் எழுந்துள்ளன.

ஆனாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறைந்தபட்ச நிவாரணம் கிடைத்துள்ளமை வரவேற் கத்தக்கது.

அதேநேரம் கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றப்பட வேண்டும். உயிர்த்த ஞாயிறு வழிபாட்டில் ஈடுபட்டுக்கொண்டிருந்த எதுவும் அறி யாத அப்பாவி மக்கள் குறிப்பாக சிறுவர்கள் குழந்தை கள் கொல்லப்பட்டமைக்குப் பரிகார நீதி கிடைக்க வேண்டும்.

இத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது உண்மையில் வெளிநாட்டு இஸ்லாமியத் தீவிரவாதிகள் இத்தாக்குதலை நடத்தினார்களா அல்லது உள்ளூர் அரசியல்வாதிகளின் அதிகாரத் தேவைக்காக நடத்தப்பட்ட தாக்குதலா என்பது குறித்த உண்மைகள் வெளிவர வேண்டும்.

இதுவரை நாளும் நடத்தப்பட்ட விசாரணைகளின் அறிக்கைகள் முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை. மக்களுக்கும் கத்தோலிக்க திரு அவைக்கும் உண்மை வெளிப்படுத்தப்படவில்லை நடத்தப்பட்ட விசாரணைகளின் வெளிப்படைத் தன்மையில் கத்தோலிக்க ஆயர் மன்றம் சந்தேகம் வெளியிட்டிருந்தது.

ஆனால் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இந்த நிலையில் நஷ்ட வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் உண்மை மூடிமறைக்கப்படுவதை மக்கள் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள். புதிய அரசாங்கம் இந்த விடயத்திரல கவனம் செலுத்தும் என்று நம்புகின்றோம். வலியுறுத்துகின்றோம்

**அருட்பணி.எஸ்.எமின்சிலி றொஷான்**



கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தின் புதிய கட்டடத் தொகுதிக்குள் தங்க வைக்கப்பட்டுள்ள முதியவர்கள்.

# காலத்தின் சவால்களுக்கு முகம் கொடுத்துப் பொதுநிலையினர் பணிபுரிய வேண்டும்

## அருட்தந்தை மவுலிஸ் அடிகளார்

சமகாலத்தில் சமூகமும் திருஅவையும் எதிர் கொள்ளும் சவால்களுக்கு முகம் கொடுத்து இறைமகன் இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்கப் பொது நிலையினர் முன்வரவேண்டும் என்று யாழ். மறை மாவட்ட பொதுநிலையினர் கழக இயக்குநர் அருட்தந்தை மவுலிஸ் அடிகளார் தெரிவித்தார்.

13.10.2024 அன்று கடைப்பிடிக்கப்படும் தேசிய பொது நிலையினர் தினத்தை முன்னிட்டு வழங்கிய செய்தியில் மேலும் தெரிவிக்கையில் திருமுழுக்கின் ஊடாகப் பொதுநிலை சீடத்துவப் பணிக்கு அழைக்கப்பட்ட ஒவ்வொருவரும் உலகின் சவால்களுக்கு முகம் கொடுத்து ஒளியாக, உப்பாக, புளிக்காரமாக செயற்பட்டு கிறிஸ்துவின் சீடத்துவத்துக்குள் வாழ்ந்து சமூகத்தையும் திருஅவையையும் புதுப்பிக்க முன்வரவேண்டும்.

சமூகத் தீமைகள் மலிந்து ஆன்மீக வாழ்வும் ஒழுக்க வாழ்வும் சீரழிந்து காணப்படும் சமகாலத்தில் வழிதவறிப் போவோரை நெறிப்படுத்தப் பொதுநிலையினரின் வகிபாகம் முதன்மையானது. திருஅவையோடு இணைந்து கூட்டொருங்கியக்கமாகக் கரம்கோர்த்துப் பயணித்து இந்த இலக்கை வெற்றிகரமாக அடைய இறையருள் வேண்டுவோம் எனத் தெரிவித்தார்.

### யாழ். போதனா வைத்தியசாலை புனித ஆரோக்கிய அன்னை வருடாந்த திருவிழா

யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை சிற்றாலய வருடாந்தத் திருவிழா வைத்தியசாலை ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை றெமோஸன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த மாதம் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

26ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 28ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை குருநகர் பங்குத்தந்தை அருட்தந்தை யாவிஸ் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

### எமது அரசியல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெரும் மாற்றம் ஒன்றிற்கான சிறந்த முன்மொழிவாக இருக்கும். மையரோட்டு அரசியலைத் தாண்டி கிராமமட்ட சமூக அமைப்புக்களின் கருத்துக்களை உள்வாங்கி வேட்பாளர்களை தெரிந்தெடுப்பது மிகச்சிறந்த நகர்வாக இருக்குமென்பதுடன், பால்நிலை சமத்துவம், பெண்பிரதிநிதித்துவம் குறித்தும் கருத்தில் எடுக்கவேண்டியதும் அவசியமாகும். செல்திசை தெரியாது தடுமாறும் அவலநிலையில் உள்ள தமிழ் இனத்திற்கு சரியான திசைகளைக் காட்டுவது எமது வரலாற்றுக் கடமையென்பதை உணர்ந்து கொள்ளுவோம். தூரநோக்கற்ற அரசியற் குழப்பங்களால் எமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்துபோகக் கூடிய ஆபத்து அணிமித்துள்ள இவ்வேளையில் ஊழலற்ற நேர்மையான அரசியல் போக்குக் குறித்துத் தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்பு 'புதிய மாற்றத்தை' வேண்டி நிற்கின்றது. நேர்மையான அரசியல் தெளிவு மிக்க ஒரு புதிய அரசியல் நகர்வை மேற்கொண்டு ஒரு தேசிய இனமாக எழுந்து நின்றால் மட்டுமே தமிழ் இனம் தன் இருப்பின் உரிமைகளுக்கான பேரம் பேசும் சக்தியாக எழுந்து நிற்க முடியும் என்பதையும் பேரன்போடு வலியுறுத்துகின்றோம்.

### புனித திரேசாள் ஆலய வருடாந்த திருவிழா

கிளிநொச்சி புனித திரேசாள் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை சில்வெஸ்ரதாஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் உதவிப் பங்குத்தந்தை அருட்தந்தை ராஜ் டிலக்சன் அவர்களின் உதவியுடன் 1ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 30ஆம் திகதி திங்கட்கிழமை நற்கருணைவிழா இடம் பெற்றது. திருவிழாத் திருப்பலியை கிளிநொச்சி மறைக் கோட்ட முதல்வர் அருட்தந்தை பெனற் அவர்களும், நற்கருணை விழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட நிதி முகாமையாளர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

### தமிழ்த்தூது..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'வகிபாகம்' என்ற தலைப்பில் இவ்வருடத்திற்கான நினைவுப் பேருரையை ஆற்றினார். இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கத் தலைவர் பேராசிரியர் வேல்நம்பி, பெருந்தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ், சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் திரு. நா. குமரிவேந்தன், பொதுச் செயலாளர் செந்தமிழ்ச் சொல்லருவி திரு. லலீசன், திருமறைக் கலாமன்றப் பிரதி இயக்குனர் திரு. யோன்சன் ராஜ்குமார், குருக்கள், துறவிகள், பாடசாலை, குருமட மற்றும் பல்கலைக்கழக மாணவர்களெனப் பலரும் கலந்து நிகழ்வைச் சிறப்பித்தனர்.

### வெள்ளி விழா வாழ்த்துக்கள்




**2024 ஆம் ஆண்டில் துறவற அர்ப்பண வாழ்வில் வெள்ளி விழாக் காணும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியர்களை மனமார வாழ்த்துகின்றோம்.**

அருட்சகோதரி மேரி ஷமில்டா - புனித அந்தோனியார் ஆலயம், சாம்பல் தீவு, திருகோணமலை
அருட்சகோதரி மேரி அஞ்சலினி - கிறிஸ்து அரசர் ஆலயம், கிண்ணியா திருகோணமலை
அருட்சகோதரி மேரி பிரதீபா - புனித மரியாள் பேராலயம், திருகோணமலை
அருட்சகோதரி மேரி டினேஸா - புனித கார்மேல் மாதா பேராலயம், சிலாபம்
அருட்சகோதரி மேரி தயாளினி - புனித பெர்னதேத் ஆலயம், சிலாபம்
அருட்சகோதரி மேரி பிறைமில்டா - புனித யாகப்பர் ஆலயம், இளவாலை, யாழ்ப்பாணம்
அருட்சகோதரி மேரி டிலுக்ஸி - புனித செபஸ்ரியார் பேராலயம், மன்னார்
அருட்சகோதரி மேரி நவோதினி - புனித செபஸ்ரியார் ஆலயம், சிலாபம்
அருட்சகோதரி மேரி விமலினி - புனித அந்தோனியார் ஆலயம், சுண்ணாகம், யாழ்ப்பாணம்

## நல்லாயன் ஆன்மீகப் பணியகத்தில்

# யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மற்றும் கத்தோலிக்க மாணவர் ஒன்றியம்

## ஆகியவற்றின் பொன்விழாக் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத்துறை ஒழுங்கு செய்த யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தினதும், கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தினதும் பொன்விழா நிகழ்வுகள் 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 06 ஆம் திகதி நல்லாயன் ஆன்மீகப் பணியகத்தில் நடைபெற்றது. இது ஓர் இரட்டைக் கொண்டாட்டமாக இருந்தது. 1974 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 06 ஆம் திகதி அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை யாழ்ப்பாண வளாகமாக வைபவ ரீதியாகத் திறந்து வைத்தார்.



உடனடியாக அதே ஆண்டில் கத்தோலிக்க மாணவர் ஒன்றியமும் யாழ்ப்பாண வளாகத்தில் நிறுவப் பட்டது. இவ்விரு நிறுவனங்களின் ஐம்பது வருட அர்ப்பணிப்பு நிறைந்த சேவையை சிறப்பித்துக் காட்டுவதாக இப்பொன்விழாக் கொண்டாட்டங்கள் அமைந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் மற்றும் கல்விச் சமூகத்தினர், தற்போதைய மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் அனைத்துச் சமயத் தலைவர்கள் நன்றியுணர்வு மற்றும் எதிர்காலத் திற்கான நம்பிக்கையின் உந்துதல் ஆகிய மனநிலையுடன் இக்கொண்டாட் டங்களில் ஒன்றிணைந்தனர்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன் விழாவைக் கொண்டாடும் இவ்வாண்டில், கத்தோலிக்க மாணவர் ஒன்றியமும் தனது ஐம்பது வருடப் பணி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்டாடுகிறது. கத்தோலிக்க மாணவர் ஒன்றியம் பின்னர் நல்லாயன் ஆன்மீகப் பணியகமாகப் பரிணாமம் பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் பயிலும் கத்தோலிக்க மாணவர்களின் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்து, பரந்த கல்விச் சூழலில் அவர்களின் நம்பிக்கையைப் பிரதிபலிப்பதற்கான வாய்ப்புக்களை வழங்கித் தன் பணியைத் தொடர்கின்றது. இந்த இரட்டைக் கொண்டாட்டம் பல்கலைக்கழகத்தினதும், ஆன்மீகப் பணியகத்தினதும் பின்னிப்பிணைந்த வரலாற்றை வெளிப்படுத்தி மாணவர்களின் கல்வி, நம்பிக்கை மற்றும் சமூக அர்ப்பணிப்பை மேம்படுத்துவதற்கான அவற்றின் பகிரப்பட்ட அர்ப்பணிப்பைக் குறிக்கிறது.

நல்லாயன் ஆன்மீகப் பணியகத்தில் நடைபெற்ற இந்நிகழ்வு, கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் முதல் ஆன்மீக வழிகாட்டியாகச் செயற்பட்ட அருட்திரு ஜெயசீலன் அவர்களின் தலைமையில், காலை 7:00 மணிக்கு நன்றிக் கூட்டுத் திருப்பலியுடன் ஆரம்பமானது.

கத்தோலிக்க மாணவர் ஒன்றிய அங்கத்தவர்கள், பல்கலைக்கழகச் சமூகத்தினர், பழைய மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் எனப் பலர்கலந்து கொண்ட இந்த விசேட வழிபாடானது கடந்த ஐம்பது வருடங்களாகப் பெற்ற அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்தும் வாய்ப்பை வழங்கியது. கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே ஆன்மீகப் பணியாளராக இருந்து அதன் வளர்ச்சிக்குச் சான்றுபகரும் அருட்திரு ஜெயசீலன் அவர்கள் ஆன்மீகப் பணியகத்தின் விழுமியங்களைப் பிரதிபலித்து இதயப்பூர்வமான மறையுரையாற்றினார். வேகமாக மாறிவரும் இன்றைய உலகில் விசுவாசம் மற்றும் கிறிஸ்தவ விழுமியங்களைப் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். மாணவர்கள் தமது ஆன்மீக மற்றும் கல்வி வாழ்வில் சிறந்து விளங்கத் தொடர்ந்து உழைக்க ஊக்குவித்தார். 1974 இல் நிறுவப்பட்ட கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் முதலாவது மாணவத் தலைவராக மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டவரும், 1983 ஆம் ஆண்டு ஆடி மாதம் 23 ஆம் திகதி சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்டவருமான மறைந்த திரு. அந்திரேசப்பிள்ளை விமலதாசன் அவர்களின் நினைவுகளையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

வழிபாடுகளைத் தொடர்ந்து, காலை 8:00 மணியளவில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறி சற்குணராஜா ஒருங்கிணைந்த ஆன்மீக எழுச்சிநிறைந்த உரையை நிகழ்த்தினார். அவர் தனது உரையில், பல்கலைக் கழகத்திற்குள் துடிப்பான கிறிஸ்தவ சமூகத்தை வளர்ப்பதில் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் உறுதியான பங்களிப்பைப் பாராட்டினார். பல்கலைக்கழக வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளும் அதே வேளையில், மாணவர்கள் தமது விசுவாச விழுமியங்களைப் பாதுகாத்து வளர்ப்பதற்கான கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் பங்களிப்பை எடுத்துரைத்தார். பல்கலைக் கழகத்தின் கலாசார மற்றும் ஆன்மீக வாழ்வைப் பேணிப் பணிபுரிதல் மற்றும் சமூகத்தின் விழு மியங்களை ஊக்குவிப்பதில் ஒன்றியத்தின் பங்களிப்புகள் விலைமதிப்பற்றவை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதனைத் தொடர்ந்து கத்தோலிக்க மாணவர் ஒன்றித்தின் ஐம்பதாண்டு வரலாறு மற்றும் பல்கலைக்கழகச் சமூகத்தில் அதன் செல்வாக்கு ஆகியவற்றை ஆவணப்படுத்தும் நூல் வெளியிட்டு வைக் கப்பட்டது. "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கத்தோலிக்க மாணவர் ஒன்றியமும் (நல்லாயன் ஆன்மீகப் பணியகம்):

ஐம்பது ஆண்டுகளின் மீள்பார்வை" என்ற தலைப்பில் பேராசிரியர் அருட்திரு யோ.கி. போல் றொகான் தொகுத்துள்ள இந் நூல் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் நீண்ட பயணத்தின் முக்கிய கட்டங்களை உள்ளடக்கியுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத் தின் நீண்டகால இருப்பையும், கத்தோலிக்க மாணவர்களின் வாழ்வில் அது தொடர்ந்து செலுத்தும் செல்வாக்கையும் ஆவணமாக்கும் ஒரு சான்றாக இந்நூல் விளங்குகிறது.



கத்தோலிக்க மாணவர் ஒன்றியத் தின் வளர்ச்சிக்கும் அதனை நல்லாயன் ஆன்மீகப் பணியகமாக மாற்றுவதற்கும் முக்கிய பங்காற்றிய மறைந்த திரு. அந்திரேசப்பிள்ளை விமலதாசன் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வானது இந்தக் கொண்டாட்டத்தின் மிகவும் உணர்ச்சிகரமான தருணங்களில் ஒன்றாக அமைந்திருந்தது. அருட்தந்தை ஜெராட் சவிரிமுத்து அவர்கள் திரு. விமலதாசனின் ஆளுமை மற்றும் ஒன்றியத்தின் வளர்ச்சியில் அவர் ஏற்படுத்திய நீடித்த தாக்கம் என்பன குறித்து மனதைத் தொடும் அஞ்சலி உரையை வழங்கினார். பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. விமலதாசன், அர்ப்பணிப்பும் பணிவும் மிக்க ஒரு தனிமனிதராக, ஒருங்கிணைந்த மானிட விடுதலைக்காகவும், கத்தோலிக்க மாணவர் சமூகத்திற்காகவும் தனது வாழ்வை அர்ப்பணித்தவராக நினைவுகூரப்பட்டார். திரு. விமலதாசனின் தன்னலமற்ற ஆளுமை மற்றும் கத்தோலிக்க மாணவர் ஒன்றிய வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணிகள் போன்ற விடயங்கள் பற்றிக் கேட்டவர்கள் நெகிழ்ச்சியடைந்தனர்.

அஞ்சலிக்குப் பிறகு, கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் ஐம்பதாண்டு கால வரலாற்றை வெளிப்படுத்தும் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டது. கத்தோலிக்க மாணவர் ஒன்றியப் பயணத்தின் முக்கிய மைல்கற்களை எடுத்துரைக்கும் புகைப்படங்கள், ஆவணங்கள் மற்றும் மறக்க முடியாத நினைவுப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டன. 1974 இல் அதன் தாழ்மையான தொடக்கத்திலிருந்து இன்றுவரையான பரிணாம வளர்ச்சியையும், வரலாற்றுப் பயணத்தையும் கண்காட்சி வழங்கியது. பங்கேற்பாளர்கள், குறிப்பாக முன்னாள் மாணவர்கள், தங்கள் சொந்த அனுபவங்களையும், அவர்களின் ஆன்மீக மற்றும் கல்வி வளர்ச்சியில் ஒன்றியம் வகித்த குறிப்பிடத்தக்க பங்கையும் பகிர்ந்து கொண்டனர். கண்காட்சியைத் தொடர்ந்து சகோதரத்துவக் காலை உணவுப் பகிர்வில் அனைவரும் பங்கேற்றனர். ஒன்றித்தின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் நண்பர்கள் மீண்டும் இணைவதற்கு இந்நிகழ்வு வாய்ப்பளித்தது.

பொன்விழாக் கொண்டாட்ட நிகழ்வுகள் கடந்த காலத்தின் பிரதிபலிப்பை விட எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்நோக்கும் தருணங்களாகவும் அமைந்திருந்தன. கடந்த காலத்தைப் பற்றி சிந்திக்கவும், நிகழ்காலத்தை கொண்டாடவும், சேவை மற்றும் சமூக அர்ப்பணிப்பு ஆகியவற்றைத் தொடரும் நம்பிக்கை நிறைந்த எதிர்காலத்தை எதிர்நோக்கும் நிகழ்வாகவே யூபிலிக் கொண்டாட்டம் அமைந்தது. இந்த நிகழ்வு கிறிஸ்தவ நாகரிகத்துறைக்கும் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்திற்குமிடையிலான பிணைப்பையும் வலுப்படுத்த உதவியது. பல்கலைக் கழகத்திற்குள் கிறிஸ்தவ விழுமியங்கள் நிறைந்த ஒரு சமூகத்தை வளர்ப்பதற்கான அனைவரதும் பகிரப்பட்ட நோக்கத்தை வலுப்படுத்தியது. முன்னாள் மாணவர்களுடன் மீண்டும் இணைவதற்கான ஒரு தளமாகவும் அமைந்து கடந்த கால மற்றும் தற்போதைய உறுப்பினர்களிடையேயான இணைப்பையும், ஒரே இலக்கு நோக்கிய பயணத்தையும் வலுப்படுத்த உதவியது.

புனித பற்றிமா அன்னை
தமிழ் ஆன்மீக பணியகம் தயாரித்தளித்த

# மறைகாத்த “மாவீரன்”

## (தென் மோடி நாட்டுக்கூத்து)

கனடா, தராறன் மரா, மிசிஷாக்கா புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீகப் பணியகத்தினால் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்ட இலங்கையின் பாதுகாவலராம் புனித யோசவ்வாஸ் முனிவரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ”மறைகாத்த மாவீரன்” என்னும் தென் மோடி நாட்டுக்கூத்து.

இந்நிகழ்வானது புனித பற்றிமா அன்னை தமிழ் ஆன்மீகப் பணியகத்தின் பங்குத்தந்தை அருட்திரு கனிசியஸ் ராஜ் தலைமையில், ஓகஸ்ட் மாதம் 24ம் திகதி 2024ம் ஆண்டு மிசிஷாக்கா 4300 காவ்த்ரா மராட்டில் அமைந்துள்ள ஜோண் போல் II பாலிஷ் கலாசார மண்டபத்தில் மிகவும் சிறப்பான முறையில் அரங்கேறியது.

கூத்து என்பது ஆடல், பாடல், துள்ளுதல் போன்ற முப்பரிமாணங்களையும் கொண்ட ஒரு கலைவடிவம். இது வடமோடி, தென் மோடி என பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டு வெவ்வேறான ஆட்ட வடிவங்களையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. தமிழர்களின் பாரம்பரிய கலைகளில் மிகவும் முக்கியத்துவமாக, முன்னணியாக அடையாளப்படுத்தும் கலையாகத் திகழ்வது கூத்துக் கலையாகும்.

ஆகவே கூத்துக்கலையை அழியவிடாது காப்பது தமிழர்களாகிய எங்களின் தலையான கடமையாகும். அந்த வகையில் கனடா மண்ணில் மேடையேற்றப்பட்ட ”மறைகாத்த மாவீரன்” என்கின்ற தென் மோடி நாட்டுக்கூத்து மிகவும் அர்த்தமுள்ளதாக இருந்தது.

இந்நிகழ்வினைச் சிறப்பிக்க ரொறன்றோ உயர்மறை மாவட்ட பேராயர் அதிவணக்கத்துக்குரிய பிரான்சிஸ் லியோ அவர்களும், மற்றும் ரொறன்றோ அண்ணாமலை பல்கலைக்கழக பேராசிரியர்களான மரியாதைக்குரிய டாக்டர் அருட்திரு ஜோசப் சந்திரகாந்தன் அவர்களும், மதிப்புக்குரிய இளையதம்பி பாலசுந்தரம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். மற்றும் ரொறன்றோ மறை மாவட்டத்தில் மறை பணிஆற்றி வரும் அருட்தந்தை யர்களும் இந் நிகழ்வில் இணைந்து சிறப்பித்தனர்.

பல வருடங்களின் பின் “மறைகாத்த மாவீரன்” என்னும் நீண்ட தென் மோடி நாட்டுக்கூத்தினை நேரடியாகப் பார்த்ததில் மட்டற்ற மகிழ்ச்சி. இதில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் கூத்தில் எவ்வித அனுபவங்களும் இல்லாதவர்கள். ஆனாலும் அந்தப் புதிய முகங்களை இனனத்து குறுகிய காலப் பயிற்சியினை அளித்து, இக்கூத்தினைமிக சிறப் பான முறையில் காட்சிகளை நன்கு ஒழுங்குபடுத்தி வழிநடத்தி இருப்பது பாராட்டுக்குரியது.

கூத்து கஷ்டமான, கடினமான ஒரு நிகழ்வாகத்தான் பார்க்கப்படு கிறது. ஆகவே அதற்கு நீண்ட நாட்கள் பயிற்சி தேவை, கூத்தைப் பொறுத்த மட்டில் பின்னணி இசையையும், தாளத்தையும் நன்கு கேட்டறிந்து பாட வேண்டும். அத்தோடு பாடலுக் ஏற்றால் போல் ஆட்ட வடிவத்தையும் கொண்டு வர வேண்டும். அப்போது தான் அது முழுமை பெறும். அந்த வகையில்” மறைகாத்த மாவீரன்” என்கின்ற கூத்து வடிவம் பார்ப் போரை மகிழ்வித்திருக்கிறது என் பதில் எந்த மாற்றமும் இல்லை. அது மட்டுமல்லாது கூத்தோடு சேர்ந்த காட்சிக் கோர்வை இன்னும் அற்புதமாக இருந்தது. அரங்கில் பின் புறம் அமைக்கப் பட்டிருந்த வெள்ளைத்திரையில் கதை, கருத்துக்கேற்றால் போல் காட்சிகளும் மாறி மாறி வந்து போயின. அவை யாவும் பார்ப்போரைப் பழைய கால இலங்கையின் பல இடங்களையும் நினைவுக்கு கொண்டு வந்தது. அதுமட்டுமல்லாது பின்னணி இசையில் இணைந்து கொண் டவர்கள் தங்கள்திறமையை வெளிப்படுத்தி இருந்தார்கள். ரமணிகரன் சண்முகநாதன் (ஹார்மோனியம்), நவநீதன் மதவராஜ்(தபேலா), அஜய்ராம் சிறீகமலன் (மிருதங்கம்), ராஜன், அசோக் (தாளம்) இவர்களின் பின்னணி இசையினால் இக்கூத்து மெருகூட்டப்பட்டது.





இந்நாட்டுக் கூத்தினைமிகச் சிறப்பாக அரங்கேற்றம் தெய்வதற்கு முதுகெலும்பாக இருந்து நெறியாள்கை செய்தவர், திருமறைக் கலாமன்றத்தில் கலைப்பணி ஆற்றுபவர்களில் ஒருவரான கொன்ரன்ரைனஸ் அன்ரனிக்குயின் (ராஜன்) ஆவார். இவர் யாழ்ப்பாணம், கொழும்பு திருமறைக் கலாமன்றத்தின் கலைப்பணியில் முன்னின்று உழைத்த பன் முகப்பட்ட ஒரு கலைஞராவார். பிராந்திய மன் றங்களுக்கு சென்று அரங்கப் பயிற்சிகளை அளித்துப் பல கலைஞர்களை உருவாக்கியவர். குறிப்பாக கொழும்பு திருமறைக் கலாமன்றக் கலையகத்திலும் தனது கலைப் பணியை முன்னெடுத்து புதிய கலைஞர்கள் உருவாக வழிவகுத்த ஒரு ஆசான்.

நாடகம், நடனம், கூத்து, மேடை உடை, ஒப்பனை என்று கனடா மண் ணில் கலைக்கான பாதையில் கால் பதித் திருக்கும் கலைஞர். அத்தோடு இவரோடு இனனந்து கூத்துக் கலை யில் பிரபல்யமான வரும், பலகூத்துகளில் பிரதான பாத்திரமேற்று நடித்தவரும், நெறியாள்கை செய்த வருமான திரு.செபஸ்ரியன் மைக்கல்ராஜ் (அசோக்) இக்கூத்திற்குப் பக்கபலமாக நின்று உழைத்தவர். இவர் கனடா திருமனைறக் கலாமன்றத்தின் முக்கிய தூ ணாக இருந்து செயற்படுகிறார். இவர்கள் இருவரும் இணைந்து “மறைகாத்த மாவீரன்” என்னும் தென் மோடி நாட்டுக்கூத் தினை சிறந்த முறையில் நெறியாள்கை செய்து, அதில் வெற்றியும் கண்டனர். இரண்டு மணித்தியாலங்கள் கொண்ட இக் கூத்தினை மக்கள் அமைதியான முறை யில் கண்டு மகிழ்ந்தனர். “மறைகாத்த மாவீரன்” என்னும் தென் மோடி நாட்டுக்கூத் தினை எழுதியவர் கலாபூசணம் ஆ.பாலதாஸ் அவர்கள். இவர் பாஷையூர் மண்ணில் மலர்ந்து தனது சிறுவயதில் கலையின் மேல் தாகம் கொண்டவராய் மிளிர்ந்தார். தமிழரின் பாரம்பரிய கலையான நாட்டுக் கூத்துக் கலையைப் பேணிக் காத்தவர்.

அதனால்” வேத கலாவித்தகன்” எனற மகுடத்தை அணிந்து கொண் டவர். இவர் சிறு வயதில் ஆரம்பித்த கலைப் பயணம் வளர்ந்து வளர்ச்சி கண்டது. நாடக நடிகனாக, நெறியாளராக, ஒப்பனைக் கலைஞராக, ஹார்மோனிய இசைக்கலைஞராகவும் திகழ்ந்தவர். தமிழரின் நாட்டுக்கூத்து கலையையும் இசை நாடகத்தையும் மரபு குலையாமல் பேணிக்காத்து காலத்துக்கு ஏற்றவாறு புத்தாக்கங்களில் ஈடுபட்டது இவருக்குரிய தனிச் சிறப்பாகும். தனது ஆளுமையின் மூலம் பற்பல இடங்களுக்கு இக் கலை வடிவங்களை எடுத்துச் சென்று அடுத்த சந்ததிக்குக் கையளித்து அதில் வெற்றியும் கண்டார். இவரது இந்த மகத்தான பணி பாராட்டுக்குரியது.”

மறைகாத்த மாவீரன்” என்ற தென் மோடி நாட்டுக்கூத்தில் குறிப்பிட்ட சில நிகழ்வுகளை மட்டுமே தாங்கி இருந்தாலும் குறுகிய நேரத்தில் தேவையான ஒரு கூத்தனுபவத்தைப் பெறுவதற்கு இப்பிரதி துணைசெய்கிறது. ஆகவே மேற்குறிப்பிட்ட இவரது செயற்பாட்டுக்காக இவரைப் பாராட்டி மகிழ்கின்றோம்.

மறைகாத்த மாவீரன் என்னும் தென் மோடி நாட்டுக் கூத்தினை எழுத்துருவில் வெளிக் கொணர்ந்த அமரர் திரு ஆ.பாலதாஸ் அவர்களின் மகனான அருட்தந்தை பிறாயன் அவர்கள் இக்கூத்தினை கனடா மண்ணில் மேடையேற்று வதற்கு அனுமதியும் கொடுத்து தன்னுடைய முழுமையான ஆதர வையும் கொடுத்துள்ளார். ஆகவே அவருக்கும் இந்த வேளையில் மனம் நிறைந்த நன்றிகள் உரித்தாகுக!

கனடா மண்ணில் இளம் தலைமுறையினரோடும் புதிய ரசனையோடும் “மறைகாத்த மாவீரன்” தென் மோடி நாட்டுக்கூத்து அரங்கேறியதில் மட்டற்ற மகிழ்ச்சி. இந்நிகழ்வினைப் பிற இடங்களில் இருந்து வந்த மக்களும் மிசிஷாக்கா பற்றிமா ஆன்மீகப் பணியகத்தைச் சேர்ந்த மக்களும் இதனைக் கண்டுகளித்து, மகிழ்ந்து, கலை ஞர்களையும் பாராட்டினர். புனித யோசவ்வாஸ் முனிவரின் வாழ்க்கை வரலாற்றை இக்கூத்தின் மூலம் அறி யக்கூடியதாக இருந்தது. இதனை இதுவரை பாத்திராதவர்களுக்கு இது ஒரு புதிய படைப்பாக அமைந்தது. ஆகவே இனிவரும் காலங்களில் இது போன்ற எமது மரபு சேர்ந்த ஆற்றுகைகளை அரங்கேற்ற வேண் டும். வளர்ந்து வரும் சமுதாயத்திற்குப் புதிய மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும். இதுவே இப்படைப்பின் நோக்கமாக இருந்தது எனலாம்.



மரியஹெனிஸ் ரா, மரியஹுரபநாயகம். கனடா.

### எங்கள் நற்செயல்களால் சிறியவர், பெரியவர் அனைவரையும் மகிழ்ச்சிப்படுத்து வோம் உற்சாகமூட்டுவோம்

1. ஒருவர் மற்றவரைச் சந்திக்கும் போது, நலன் விசாரிப்போம். வணக்கம் கூறி மகிழ்வோம்.
2. சிறியவர், பெரியவர் எவர் நற்செயல்கள் செய்தாலும் அவர்களைப் பாராட்டுவோம்.
3. ஒருவர் எமக்குப் புரியும் உதவி சிறியதோ, பெரியதோ இவற்றிற்குத் தவறாமல் நன்றி கூறுவோம்.
4. எங்கும் எச்சந்தர்ப்பத்திலும் முதியோர், கற்பவதி தாய்மார், நோயாளர் போன் றோருக்கு கரிசனையுடன் துணை நிற் போம்.

### இனியவராய் வாழ்வோம்

இன்றைய உலகம் இயந்திர உலகம். இயந்திரத்தின் வேகமும், பரபரப்பும் மனிதனை விட்டு வைக்கவில்லை. அன்பான பேச்சு, கனிவான பார்வை, இதமான அரவணைப்பு இவைகள் சமாதிக்குள் சங்கமமாகிவிட்டது போலும், எங்கு நோக்கி னும் இறுகிப்போன முகங்களுடன் ஏதோ ஓர் எதிர்பார்ப்போடு மனிதர்கள் ஓடிக்கொண்டி ருக்கிறார்கள். சிறு புன்னகைக்கும் பிச்சை எடுக்கும் நிலை பெருகிவிடும் போல் தெரி கின்றது. கல்லைச் சேற்றில் போட்டார் பதியும். பாறையில் போட்டால் தெறிக்கும். அநீ தியை அநீதியால் மாற்ற முடியாது. ஏற்றுக்கொள்ளக்கூடிய இன்சொல் அறியாமையை விலக்கும். இதமாகப் பேசுவோம். இனிய நண்பர்களைச் சொந்தமாக்குவோம்

# 2024 தேசிய பொது நிலையினர் தினத்தை முன்னிட்டு யாழ். மறைமாவட்ட பொதுநிலையினர் கழகம்

## "பயணிக்கும் பாதையில்" ஒரு நோக்கு

போ.இ.ஜேசுதாசன்

திருமுழுக்கின் மூலம் இயேசுக் கிறிஸ்துவின் அரச குருத்துவத் திருக் கூட்டத்தின் அங்கமாகி, கிறிஸ்துவை மையமாகக் கொண்ட கடவுளின் மக்க-ளாய்ப் பயணிக்கும் யாழ்மறை மாவட்ட ஆறு மறைக்கோட்டங்களையும் சேர்ந்த அனைத்துப் பொதுநிலையினர்களான சகோதர சகோதரிகளுடனும் 2024 ஆம் ஆண்டுக்கான தேசிய பொதுநிலை யினர் தின வாழ்த்துகளைப் பரிமாறிக் கொள்வதில் மகிழ்வடைகிறோம். திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் அனை வரும் கிறிஸ்து எனும் மறையுடலைச் சார்ந்தவர்கள். உடல் ஒன்றேயாயி னும் உடலின் உறுப்புகள் பல. நாம் பலராயிருந்தாலும் கிறிஸ்துவோடு இணைந்திருப்பதால் (திருஅவை எனும்) ஒரே உடலாயிருக்கின்றோம். எனவே எம்மில் எந்தவித பாகுபாடு களோ, ஏற்றத்தாழ்வுகளோ இருக்கமுடி யாது. இயேசுக்கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து அவரை ஏற்று வாழும் நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழ்வ-தும், இணைந்து இறைபணியில் செயற் படுவதும் அவரின் விருப்பமாகவுள்ளது. அதனால் தான் அவர் "தூய தந்தையே! நாம் ஒன்றாய் இருப்பது போல் அவர் களும் ஒன்றாய் இருக்கும்படி நீர் எனக்கு அளித்த உம் பெயரின் ஆற்றலால் அவர்களைக்காத்தருளும்" என்று உருக்கமாக வேண்டுவதன் மூலம் தம் விருப்பத்தை வெளிப்படுத்தினார். இன்று கத்தோலிக்க சமூகத்தில் காணப் படக்கூடிய பல பிளவுகள் முரண்பாடு களை நீக்கி பொது நிலையினருக்கு இடையேயான ஒன்றிப்பைக் கட்டி-யெழுப்ப யாழ் மறைமாவட்ட பொது நிலையினர் கழகம் முனைப்பான பல பணிகளை முன்னெடுத்து வருகின் றமை சிறப்பான விடயமாகவுள்ளது.. இன்றைய சமூகத்திலும், நாட்டிலும், உலகத்திலும் காணப்படக்கூடிய பன்மைத்-துவம் மதிக்கப்பட்டு கோட்பாட்டு மையத்திலி ருந்து விலகி இயேசு காட்டிய மனித நேயப் பாதையில் மனித குல ஒன்றிப்பு சாத்தியப்பட வேண்டுமென்பதே கூட்டொருங்கியக்கமாகப் பயணித்தல் என்பதின் மையமாகும். இயேசு காட்டிய மனித நேயப்பாதை என்பது சமூகத்-தில் காணப்படக்கூடிய, மனிதர்களால் உரு வாக்கப்பட்ட சட்டம், சடங்கு, கோட்பாடு என பவற்றில் இருந்து விலகி துன்புறும் மனிதர் களின் வேதனைகளை, துன்பங்களை, பிரச் சினைகளை, அவர்களின் கண்ணீரை மை-யப்படுத்தி அவர்களை ஆற்றுப்படுத்துவதும் அவர்களுக்கு நல் வழியைப் காட்டுவதுமாகும். இயேசு மொழிந்த "நல்ல சமாரியன்" கதை யின் பொருளும் இதுவன்றோ.

திருஅவையின் ஆன்மீக மற்றும் பிறரன்புப் பணியில் பயணிக்க யாழ்ப்பாண மறைமாவட்ட பொதுநிலையினருக்காக 2009 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட யாழ் மறை மாவட்ட பொதுநிலையினர் கழகமானது இன்று பதினைந்து ஆண்டுகளைக்கடந்து தற்போதைய இயக்குநர் அருட்தந்தை மௌலிஸ் அடிகளார் வழிநடத்தலில் தன் பணிகளைப் பன்முகப்படுத்தித் துடிப்பாகப் பயணிப்பது குறிப்பிடத்தக்கது. இதன்போது சமயம் சார்ந்த ஆன்மீக வலுப்படுத்தல்களுக்கு மேலதிகமாக பல்துறைசார்ந்த சேவைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க மறை மாவட்ட மட்டத்-தில் கத்தோலிக்க சட்டத்தரணிகள் அமைப்பு, கத்தோலிக்க மருத்துவர் அமைப்பு போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளமை சிறப் பான வளர்ச்சிப்படிகளாகப் பார்க்கப்படுகின்றது. அடுத்து மாற்றுவலுவுடையோரைக் கொண்ட அமைப்பு ஒன்றினை தீவகக் கோட்டத்தில் ஏற் படுத்துவதற்கான முயற்சிகளை தீவக மறைக் கோட்ட பொது நிலையினர் கழகம் மேற் கொண்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டில் முல்லைத்தீவு மறைக்கோட்ட பொது நிலை யினர் கழகம் அங்கு கத்தோலிக்க ஆசிரியர் அமைப்பினை உருவாக்கியுள்ளமையும் குறிப் பிடத்தக்கது.

**சுற்றுச்சூழல் சார் கரிசனை**

பழைய ஏற்பாட்டுக் காலத்திலேயோ புதிய ஏற்பாட்டுத் தொடக்க காலத்திலேயோ சுற்றுச் சூழல் சார்ந்த பிரச்சனைகள் அதாவது மனித-இயற்கை முரண்பாட்டின் சூழல் பாதிப்புக் கள் உணரப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் அக்காலத்தில் மனித-மனித முரண்பாடும், மனித -இறைவன் முரண்பாடும் கூர்மை பெற்றிருந்தமை கவனிக்கத்தக்கது. ஆனால் இக்காலத்தில் மூன்றாவதாக மனித-இயற்கை முரண்பாடும் பெரும் மனித-இயற்கை மோதலாக வலுப்பெற்றுள்ளது. மனிதன் இயற்கைக்கு விரோதமாக மேற் கொள்ளும் செயற்பாடுகளுக்குப் பதிலடி யாக இயற்கை பெரும் சீற்றத்துடன் பல அழிவு-களை ஏற்படுத்துவதை இன்று அடிக்கடி காணக்கூடியதாகவுள்ளது. இந்நேரத்தில் திருத்தந்தையின் 2024 செப்ரெம்பர் மாதத்-திற்கான தனது செய்தியில், உலக மக்கள் அனைவரும் தம் தனிப்பட்ட மற்றும் சமூகப் பழக்கவழக்கங்களை மாற்றியமைத்து ஏழ்மைக்கு எதிராகப் போராடவும், இயற்கை யைப் பாதுகாக்கவும் தம்மை அர்ப்பணிக்க வேண்டுமென அழைப்பு விடுத்துள்ளார். மேலும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி கத்தோலிக்க திருஅவையில் படைப்பு மீது அக்கறைக்கான செபநாளாக சிறப்பிக்கப்படுவ-துடன் திருத்தந்தையின் செப்ரெம்பர் மாத செபக் கருத்தானது சுற்றுச்சூழலை மையம் கொண்ட தாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலை யில் இளவாலை மறைக்கோட்டம் 2024 ஆம் ஆண்டுமுதல் "பேண்தகு சுற்றாடல் நோக்கிய பயணம்" எனும் கருப்பொருளில் சுற்றாடல் சார் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின் றமை குறிப்பிடத்தக்கவிடயமாகும். எதிர் காலத்தில் அனைத்துக் கோட்டங் களிலும் இச்செயற்பாட்டை முன்னெடுப் பதற்கு மறைமாவட்ட இயக்குநர் அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளமை மேலுமொரு சிறப்பான விடயமாகும்.

ஏனைய பணிகள் தொடர்பில் இயேசுவின் பணிவாழ்வில் நாம் கண்டு கொள்ள வேண்டிய சமூகவியல் அக் கறை புதிய ஏற்பாட்டு நூல்களில் தாராள மாகவுள்ளது. இதன் அடிப்படையிலேயே எமது இவ்வுலகப் பணிவாழ்வும் சமய மற்றும் சமூக அக்கறையுடன் இணைந்திருத்தல் அவசியமாகிறது.

**பங்கேற்புக்கான அழைப்பு**

பொதுநிலையினரின் சமய, சமூகப்பணிகள் தாங்கள் சார்ந்த ஆலய வட்டத்திற்குள் குறுகி விடாமல் பங்கு மட்டத்திலும், கோட்ட மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் அதற்கு அப் பாலும் விரிந்து பரந்து செல்ல வேண்டு மெனத் திருஅவை விரும்புகிறது. ஆரம்ப திருச்சபையில் திருத்தூதர் களும் பின்நாட்களில் மறைபரப்புப் பணி யாளர்களும் தம் நாட்டிற்கு வெளியே உலகின் கடைக் கோடி எங்கும் சென்று நற்செய்திப் போதனைகளையும், இறை பணியாகப் பல்வேறு சமூகப்ப-ணிக ளையும் மேற்கொண்ட வரலாறு எமது கத்தோலிக்க திருஅவையின் வரலாறாகவுள்ளது. அவ்வாறே யாழ் மாவட்டத் திருஅவையானது இறை யரசுப்பணிகளை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு அனைத்துப் பொதுநிலையினர் மற்றும் திருநிலையினரின் ஆக்க பூர்வமான பங்கேற்புக்காகக் காத்து நிற்கிறது .

# கருவறை ஞாபகங்கள்



அருட்பணி எஸ்.அஜந்தன்

**வீ**டு என்கிற அழகான தூக்கணாங்குருவிக் கூட்டின் ஞாபகங்களை ஆசையோடு பேசுகிறேன். வீடு கூட ஒரு கருவறை தான். ஆனால் கருவறையைவிட ஒரு தனிச்சிறப்பு இந்த வீட்டுக்கு இருக்கிறது. கருவறையில் வாழ்ந்த இடத்தின் நினைவுகள் நெஞ்சிலே நிற்பதில்லை. தம் வீட்டில் ஒவ்வொரு இடத்திலும் ஏதோ ஒரு ஞாபகம் ஒட்டியே இருக்கிறது.

முதல் முதலாய் உடும்பு பிரட்டிய அந்த சாமி யறை மூலை அம்மா சொல்லி ஞாபகத்தில் இருக்கும். ஒரு மைனாக் குஞ்சு போலத் தத்தித் தத்தி நடந்து விழுந்தபோது தாங்கிய விராந்தை, அப்பாவின் மார்பில் படுத்துத் தூங்கி போகும் மண் திண்ணை, அம்மா நிலா காட்டி சோறு ஊட்டுகிற அந்த ஜன்னல் ஓரம், பாடப் புத்தகத்-துக்குள் மறைத்து வைத்த மயிலிறகு குட்டி போட்டு இருக்கா என அடிக்கடி எட்டிப் பார்க்கும் சின்ன அறையின் புத்தகப் பறன், தம்பியோடு ஒடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக் கையில் தலையில் கதவு அடித்து அந்தக் கதவில் என் இரத்தம் ஒட்டிக் கிடந்த அந்த இடம் அப்படியே நெஞ்சினில் ஈரமாக இருக்கின்றது.

பள்ளிப் பருவத்தில் மீசை அரும்பத் தொடங்கிய ஒரு வாலிப நாளில் பள்ளித் தோழி ஒருத்தி தந்த கடி தத்தை பரவசத்தோடு உடலெல்லாம் செவியாக்கி நான் ரகசியமாய் வாசித்ததை இன்னமும் ரகசியமாய் அடைகாக் கும் சின்ன அறையின் சுவர்கள், நான் முதல் முதலாய்ப் பெற்ற வெற்றிக் கிண்ணத்தைப் பெருமையோடு மார்பிலே சுமக்கிற எங்கள் வீட்டு அலுமாரி, அம்மா உருண்டை திரட்டித் தரும் நிலாச் சோற்றை உண்டு விட்டு அடுத்த உருண்டைக்காய் விரல் சூப்பிக் கொண்டு காத்திருக்கும் அந்த பால் மணல் முற்றம், இப்படி நினைத்து நினைத்துப் பார்க்கையில் நெஞ்சிலே தேன் ஊற வைக்கும் எத்த னையோ அழகிய ஞாபகப் பொக்கிஷங்கள் எம் வீட்டின் நினைவுகளாய் நிறைந்தே கிடக்கின்றன.

வீடு வெறும் கட்டிடம் அல்லவே. அதற்கு உயிர் இருக்கிறது. அதன் ஒவ்வொரு கல்லோடும் எமக்கு ஏதோ ஒரு உறவு இருக்கிறது. வீடு விட்டுப் பிரிந்து செல்லும் கணங்களில் நெஞ்சில் ஏதோ ஒன்று கனக்குமே. அதுதான் அந்தப் பிணைப்பு. வீடு எங்களை நேசிக்கிறது.

எத்தனை இடங்களில் எந்தப் பஞ்சு மெத்தையில் படுத்துக் கிடந்தாலும் சொந்த வீட்டில் கட்டிலிலோ பாயிலோ படுக்கும் சுகத்தைப் போல எதுவும் இல்லையே. வீட்டை போலச் சுதந்திரம் எங்கும் கிடைப்பதில்லை. நீ நிஜமாய் இருக்கும் இடம். நீ நீயாய் இருக்கிற இடம். உலகத்துக்காய் நீ போடுகிற முகமூடிகளைக் கழற்றி எறிந்து நீ சுதந்திரமாய்ச் சிரிக்கிற, உண்மையாய் அழுகிறஇடம் வீடு தானே.

ஒவ்வொரு குருவிக்கும் கூடு போல ஒவ் வொரு மனிதனுக்கும் ஒரு வீடு அமைந்து விடுகி-றது. மனிதன் ஒரு வீட்டுக்குள் இருக்கிறான் என்பது வழமையானது, ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு வீடு இருக்கிறது என்பது உண்மையானது.

மண்ணால் கல்லால் சீமெந்தினால் செய்யப்படுகிற வெறும் கட்டிடம் எப்போது வீடாகிறது. எல்லாக் கட்டடங்களும் வீடு அல்லவே.

பாசக் கொடியிலே பூத்துக் கிடக்கும் சில மனிதர்கள் அன்பால் இணைந்து அன்புக்காய் வாழும் போது அது வீடாகிறது. அங்கே என்னை நேசிக்க யாரோ இருக்கிறார்கள் என்கிற பாதுகாப்பு-ணர்வும் பாச உணர்வும் நிறைந்தே இருக்கிறது. சுயநலன்கள் கடந்த ஒரு தியாகக் கோயில் அது. அன்பு அணையாத விளக்காய் எரிந்து கொண்டே இருக்க, வேர்வைகளையும் உழைப்பையும் விட்டுக் கொடுக்கும் மனதையும் மற்ற வரின் வெற்றிக்காய் உழைப்பதையும் கட்டாயம் செய்ய வேண்டுமென ஒரு தாயைப் போல இந்த வீடு உரிமையோடு உன்னிடம் கேட்டுக் கொண்டேயிருக்கிறது.

இங்கே வாழ்பவர்கள் மனிதர்கள் ஆகை யால் பிழைகள் தவறுகள் பல இருக்கும். தாங்கிக் கொண்டு நடப்பது அவசியத் தேவையாகிறது. குடும்பத்திற்காக வீட்டுக்காக எதை வேண்டுமா-னாலும் இழந்து விடுங்கள். ஆனால் எதற்காகவும் ஒருபோதும் குடும்பத்தை வீட்டை இழந்து விடாதீர்கள். அது விலைமதிப்பில்லாத பொக்கிஷம். எல்லாப் பிரச்சினைகளுக்கும் விவாகரத்து மட்டுமே தீர்வாகாது. விட்டுக் கொடுத்துத் தெய்வங்களா-குங்கள். கடவுள்

இணைத்ததைப் பிரித்து விடாதீர்கள். வேற்றுமைகள் கூட அழகு தானே. பலவகை வர்ணங்கள் ஒன்றாய் இருந்திட ஒத்துக் கொள்வதால் தானே வானவில் கூட வானத்துக்கு வருகிறது. கடவுள் தந்த மாபெரும் பரிசு இந்த வீடு அதை ஆனந்தமாய் அனுபவியுங்கள். ஆயிரம் அர்த்தங்கள் வாழ்வில் வந்து நிறையும். அழகிய ரோஜாத் தோட்டமாய் வாழ்வு வாசம் வீசச் சிரிக்கும்.

நீளத் தொடரட்டும் உங்கள் பயணங்கள்.

# அன்பின் மகிழ்வு




### குடும்பத்தில் துயரமும் தீமையும் வன்முறையும்

திருமணமும் அதன் வழி உருவாகும் குடும்பமும் சமூகத்தின் அடித்தள மாகும். இதன் மூலம் மனிதர்கள் அன்பைப் பகிர்ந்து முழுமனித வளர்ச்சியைப் பெறுகின்றனர். திருப்பாடல் 128. 'குடும்பமானது ஆசீர்களின் அமைதியின் இடம்' என்பதனைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆனால் இன்று குடும்பங்களை நோக்குமிடத்து விவிலியம் குறிப்பிடும் குடும்பத்திற்கு முரணானதாக இன்று பெரும் சவால்களை அது சந்தித்து வருகின்றது. திருவிவிலியமும் குடும்பங்கள் சந்திக்கும் சவால்களை மிகவும் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. உலகில் பாவம் நிறைந்த நிலை ஏற்பட்டதனால் குடும்பங்கள் அனுபவிக்கும் துயரம், உடைவுகள் பற்றியும் திருவிவிலியம் குறிப்பிடுகின்றது.

தொடக்க நூலானது உலகத்தில் பாவம் நுழைந்த தன் காரணமாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைச் சிறப்பாகக் குறிப்பிடுகின்றது. அதாவது சிங்காரவனத்தில் ஆரம்பித்தது முதல் தம்பதிகளின் உறவு வாழ்வில் பாவத்தின் விளைவாக ஏற்பட்ட முறிவுகளை முரண்பாடுகளை திருவிவிலியம் மிகச்சிறப்பாக சுட்டிக் காட்டுகின்றது.

தொடக்க நூல் 3:16 இந்தக் குடும்பத்தில் உள்ள முரண்பாட்டை இவ்வாறு குறிப்பிடுகின்றது. 'அவர் பெண்ணிடம் உன் மகப்பேற்றின் வேதனையை மிகுதியாக்குவேன். வேதனையில் நீ குழந்தைகளைப் பெறுவாய். ஆயினும் உன் கணவன் மீது நீ வேட்கை கொள்வாய். அவனோ உன்னை ஆழ்வான்' என்றார். அதாவது பாவமானது உலகிலே நுழைந்தபோது, ஆதாம் ஏவாளுக்கு இடையே இருந்த தூய்மையான உறவானது ஒரு கணவன், மனைவி மீதான அடக்கு முறையாகவும், ஓர் அதிகார நோக்குடையதாகவும் மாறியுள்ளது. இவ்வாறு பாவமானது அழகான குடும்ப வாழ்வுக்குள் நுழைந்தது. ஏற்றத் தாழ்ச்சிகளையும் பதற்றத்தையும் ஏற்படுத்துகின்றது என்பதை விபரிக்கின்றது. குடும்ப வாழ்வில் உள்ள அன்பு பரஸ்பர மதிப்பு என்பவற்றைப் பாவம் சிதைத்து விடுகின்றது.

எனவேதான் புதிய ஏற்பாட்டில் திருமணம் என்னும் கருப்பொருளை இயேசு மிகவும் அழகாக விபரிக்கின்றார். மத்தேயு 19:3-9 இல் இயேசு திருமணத்துக்கான இறைதிட்டமானது, திருமணம் நிரந்தரமானதாகவும், ஒருமைப்பாடு உடையதாகவும் இருக்க வேண்டும் என்றும் மணமுறிவு என்பது கடவுளின் திருவுளத்துக்கு முரணானது என்றும் குறிப்பிடுகின்றார்.

விவாகரத்துக்கள், மணமுறிவுகள் போன்றவை பாவத்திற்குக் காரணமானவை என்பதனையும் கோடிட்டுக் காட்டுகின்றார். இதன் காரணமாகப் பல்வேறு வேளைகளில் குடும்பங்களைப் பாதுகாக்கப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படுகின்ற வேளையிலும், சமரசம் செய்ய முடியாத நிலையில் பல குடும்பங்கள் பிரிந்து செல்வது கவலைக்குரியதாகும். எனவே தான் இயேசு திருமணத்தை ஓர் உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்று திருஅவையில் திருமணம் செய்பவர்கள் வாழ்நாள் முழுவதுக்குமான ஒரு அர்ப்பணத்தை மேற்கொள்ள

**அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்**
**அகவொளி குடும்ப நல மையம்**

வேண்டும் என்று அழைக்கின்றார். ஆனால் பாவமானது திருமணத்தின் இந்த புனிதமான இலட்சியத் தன்மையை சீர்குலைக்கின்றது, தம்பதிகளின் இயங்களையும் கடினப்படுத்துகின்றது என்பதனை இயேசு சுட்டிக் காட்டுகின்றார்.

குடும்ப வாழ்வின் இடர்பாடுகளையும் திருவிவிலியம் சுட்டிக்காட்டுகின்றது. காயீன் ஆபேலின் கதைகள், பிதாப்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக், யாக்கோபு, தாவீது குடும்பம் என்பவை பொறாமை, வன்முறை இன்னும் முரண்பாடுகளால் நிறைந்திருந்ததை விவிலியம் கோடிட்டுக் காட்டுகின்றது.

விவிலிய வரலாற்றில் மிகவும் போற்றப்படக்கூடிய குடும்பங்களிலும் கூட, துன்பங்கள் போராட்டங்கள் இழையோடுவதைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே குடும்பத்தில் போராட்டங்கள் என்பது புதியது அல்ல. இவை வரலாற்றில் மனித அனுபவத்தின் ஒரு பகுதியாகும்.

குறிப்பாக யோபுவின் கதை நமக்கு ஓர் சிறந்த பாடமாகும். குறிப்பாக யோபுவின் வாழ்வில் வந்த துன்பம் தனக்கும் தனது அன்புக்குரியவருக்குமிடையே பிளவை ஏற்படுத்தியது எனக் குறிப்பிடுகின்றார். (யோபு 19:13-14) "என் உடன் பிறந்தவரை என்னிடம் இருந்து அகற்றினார். எனக்கு அறிமுகமானவரை முற்றிலும் விலக்கினார், என் உற்றார் என்னை ஒதுக்கினர் என் நண்பர்கள் என்னை மறந்தனர்" யோபுவின் வார்த்தைகள் குடும்ப சிதைவின் மூலம் ஏற்படும் வேதனையைப் பிரதிபலிக்கின்றது. நெருங்கிய உறவுகளுக்குள் தனிப்பட்ட துன்பங்கள் எவ்வாறு உருவாகின்றது என்பதனை யோபுவின் வார்த்தைகள் சுட்டிக்காட்டுகின்றன.


இத்தகைய வேதனையான பக்கங்கள் விவிலியத்தில் இருந்தாலும், திருவிவிலியம் நம்மை மீட்பின் நம்பிக்கைக்கு இட்டுச் செல்கின்றது. பாவமும் துன்பமும் குடும்ப உறவுகளைச் சிதைக்கக்கூடியதாகிலும், திருமணம் மற்றும் குடும்பத்திற்கான திட்டம், அன்பு, குணப்படுத்தலை மையப்படுத்தியதாகவே உள்ளது. ஒவ்வொருவரும் அன்பான குடும்பத்தை உருவாக்கும் அன்பு திருப்பயணத்தை மேற்கொள்ள எமக்கு அழைப்பு விடுக்கின்றது. திருஅவை உடைந்த குடும்பங்களை இறை இரக்கத்துக்குள் கொண்டு செல்கின்றது.

இன்று பல்வேறு சவால்களைச் சந்திக்கும் குடும்பங்களுக்கு இந்த விவிலியப் பாடமானது மிகவும் முக்கியமானது. இன்று குடும்பங்கள் பொருளாதார சுமைகள் முதல் சமூக அழுத்தங்கள் வரை பல்வேறு சவால்களைச் சந்திக்கின்றன. இவை குடும்ப வாழ்வைச் சிதைத்து, அதனைக் கடினமாக்குகின்றன.

இந்த நிலையில் சமூகத்தில் உள்ள குடும்பங்கள் வலுவூட்டப்படவேண்டும். நம் குடும்பங்கள் உடைந்தாலும், எப்போதும் நமக்கு இறைவன் துணை இருக்கின்றார் என்று நம்பிக்கை இருக்கின்றது என்பதை மனதில் கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

## அகவொளி குடும்ப நலமையம் திருமண சேவை





### மணமகள் தேவை

வயது : - 40
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- A/L
தொழில் :- வர்த்தகம்
பிரதேச செயலகம் - கொழும்பு

வயது - 31
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- A/L
தொழில் :- சாரதி டொன்பொஸ்கோ
பிரதேச செயலகம் :- கிளிநொச்சி

வயது - 33
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை- B.Sc in Computer
தொழில் :- ICTT Instructor
பிரதேச செயலகம் :-யாழ்ப்பாணம்

வயது - 39
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- கிராம உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் :- முல்லைத்தீவு

வயது - 25
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- முச்சக்கரவண்டி ஓட்டுநர்
பிரதேச செயலகம் :- சாவகச்சேரி

வயது - 29
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - A/L
தொழில் :- வியாபாரம்
பிரதேச செயலகம் :- நல்லூர்

வயது - 32
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - O/L
தொழில் :- பெற்றோலியம் நிரப்பி ஊழியர்
பிரதேச செயலகம் :- சண்டிலிப்பாய்

வயது - 47
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - MA தமிழில் முதுமாணி
தொழில் :- ஆசிரியர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

### மணமகன் தேவை

வயது - 26
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - ஜென் மருத்துவம்
தொழில் :- Physiotherapy
பிரதேச செயலகம் :- சண்டிலிப்பாய்

வயது - 29
சமயம் : - றோமன் கத்தோலிக்கம்
கல்வித்தகைமை - BIT பட்டதாரி
தொழில் :- விரிவுரையாளர்
பிரதேச செயலகம் :- யாழ்ப்பாணம்

வயது - 28
சமயம் : - சைவசமயம்
கல்வித்தகைமை - Diploma in Nurseing
தொழில் :- Nurseing
சுவீடன்

**இவை பற்றிய மேலதிக விபரங்களைப் பெற கீழ் உள்ள முகவரியில் தொடர்பு கொள்ளவும்**
**அகவொளி குடும்ப நல மையம் புனித பத்திரீசியார் வீதி யாழ்ப்பாணம்**
**தொலைபேசி இலக்கங்கள்**
**077 - 904 7651, 021- 222 2856, 077- 942 2970.**

# தனிநாயகம் தமிழின்நாயகம்



**யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் நினைவு அரங்க நிகழ்வில் மாணவன் அன்ரனிக்குமார் அனோஜ் நிகழ்த்திய உரை**

உலகத்தின் மூத்த இனங்களில் தமிழினமும் ஒன்று. மொழி, கலாசாரம், கல்வி எனப் பலவற்றாலும் பெருமை கொண்டது நம் தமிழினம். அண்மைக்காலமாகப் பல இன்னல்களைக் கடந்து மீண்டும் எம் சமூகம் எழுச்சியுறத் தொடங்கிற்று. இதற்கு மத்தியில் பயிர்களுக்குள் களைகள் எழுவது போன்று ஆங்காங்கே சமூகச் சீரழிவுகள் விஸ்வரூபம் எடுத்து வருகின்றன. அவை களையப்படாது விட்டால் முப்பது ஆண்டுகாலப் போரை விட கொடுரமான பாதிப்புக்களை நாம் சந்தித்து, எமது முகவரிகளை இழக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாக வேண்டியேற்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை.

தமிழ் செய்வதில் முதன்மை பெற்ற மண் எங்கள் மண். தமிழை வளர்த்த சான்றோர்கள் சாலவும் சிறந்து விளங்கிய மண் இந்த மண். இந்த மண்ணிலே தான் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் தமிழ்ப்பணி செய்து, தமிழாய் வாழ்ந்து, தமிழ்த்தூதாகி தரணியெங்கும் தமிழைப் பறை சாற்றினார். 'வீணாகப் பழங்கதை பேசுவதில் ஒரு மகிமையில்லை. சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கச் செய்வீர்' என்ற மகாகவி பாரதியின் கனவை மெய்ப்படுத்திய வண்ணம் 'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே' என்ற திருமூலரின் வாக்கைத் தன் வாழ்வின் மகுடமாகக் கொண்டு தமிழும், தமிழ்ப் பண்பாடும் மேலோங்க இறுதிவரை உரமேற்றி, உழைத்து நின்றவர் தனிநாயகம் அடிகளார்.

கத்தோலிக்க கிறிஸ்தவ துறவியாகத் தனது பணியை ஆரம்பித்த தனிநாயகம் அடிகளார் உலக இன்பத்தைத் துறந்தாலும், தமிழ் இன்பத்தைத் துறக்க முடியாது தமிழை முறையாகக் கற்றுத் தேர்ந்து தமிழ் வளர்க்கும், பரப்பும் தூதராகத் திகழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.

Tamil Culture (தமிழ்க் கலாசாரம்) என்ற ஆங்கில காலாண்டிதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராக 1951 - 1959 வரை இருந்தார். அதன் மூலம் அகில உலகத்திலுமுள்ள தமிழ், திராவிட ஆர்வலரை ஒன்று சேர்க்க முற்பட்டு பெரும் வெற்றியும் கொண்டார் 1961இல் சென்னையில் தமிழ்ப் பண்பாட்டுக் கழகம் (Acadamy of Tamil Culture) என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் பல ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி வெளியிட்டார் "தமிழ்த்தூது" என்ற நூல் அடங்கலாக மொத்தம் 137 நூல்களை எழுதியுள்ளார்.

மலேசியாவில் பணிபுரியும் காலத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தோற்றுநர்களில் ... (07ம் பக்.)

*(றமேஸ் - யாழ்ப்பாணம்)*

**கேள்வி: நாடாளுமன்றத் தேர்தலில் பலரும் குதித்திருக்கின்றார்கள். பல கட்சிகள் பல சுயேட்சைக் குழுக்கள்! இக்கட்சிகளிலும் சுயேட்சைக் குழுக்களிலும் மக்களை நன்றியுடன் காக்கும் நாய்களும் உண்டு. ஆட்டுத் தோல் போர்த்திய நரிகளும் உண்டு. எப்படி இவர்களை இனங்காண்பது?**

ப: றமேஸ் காலத்திற்கேற்ற அருமையான கேள்வி. அண்மையில் எங்கோ ஓரிடத்தில் பின்வரும் சிந்தனையைப் படித்தேன். அதில் 'தொலைவில் நிற்கும்போது நாய் நரியாகவும் நரி நாயாகவும் தோன்றும். அருகில் சென்று பார்த்தால் மட்டுமே நாயா, நரியா என்பது தெரியவரும்! மனிதர்களும் இப்படித்தான். கணிப்பது கொஞ்சம் கடினம்தான்!' ஆனால் புத்திக் கூர்மையோடும் அறிவுத் தெளிவோடும் இருந்தால் நன்றியுள்ள காவல்காக்கும் நாய் எது தந்திரம் மிக்க சூழ்ச்சி மிகுந்த நரி எது எப்பதை இலகுவாகக் கண்டுபிடித்து விடலாம். ஆக நாய்களையும் நரிகளையும் வேறுபடுத்துவது முக்கியம்!




*(ஆதி -கொழும்பு)*

**கேள்வி: உங்கள் கேள்வி பதிலுக்காக நாங்கள் தவம் கிடக்கின்றோம். கொஞ்சம் அதிகமாக எழுதினால் என்ன?**

ப: ஆதி, கொஞ்சம் அதிகமாக எழுதினால் என்ன என்று நீங்கள் தான் முதன்முதலாகக் கேட்டிருக்கின்றீர்கள்! கொஞ்சம் விரித்து விபரித்து எழுதிய பின் கொஞ்சம் சுருக்கமாக எழுதினால் நல்லா

# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா,அமதி**

யிருக்கும் என்று இதே ஆள் எழுதக்கூடிய வாய்ப்பிருக்கின்றது! அதனால்தான், 'ஒரு வார்த்தை போதுமென்றால் ஏன் இரு வார்த்தைகளை செலவுசெய்ய வேண்டும்' என்ற ஓர் அறிஞரின் கூற்று அடிமனத்தில் ஆழமாகப் பதிந்திருப்பதால் சுருக்கமாகவும் இறுக்கமாகவும் அதே வேளை சுவையாகவும் எழுதுவதை என்னுடையதாய் ஆக்கிக்கொண்டேன்.

*(ஜீவன் - மன்னார்)*

**கேள்வி: இவ்வாண்டு நடைபெறயிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் (கிளிநொச்சி) தேர்தல் தொகுதியில் 23 கட்சிகளும் 21 சுயேட்சைக் குழுக்களும் (396:.6), வன்னித் (முல்லைத்தீவு, வவுனியா, மன்னார்) தேர்தல் தொகுதியில் 22 கட்சிகளும் 25 சுயேட்சைக் குழுக்களும்(423:.6)! 12 ஆசனங்களுக்காகப் (819 பேர்) போட்டியிடுகின்றன! இது எதனைக் காட்டுகின்றது?**

ப: ஜீவன் - எந்தளவிற்கு பலவீனப்பட்டுப்போய் கிடக்கின்றோம் என்பதைக் காட்டுகிறது! குறிப்பாகத் தமிழரின் தனிப்பெரும் குணத்தைக் காட்டி நிற்கிறது!

*(அமலன் - யாழ்ப்பாணம்)*

**கேள்வி: சமுதாயம் நல்ல மாற்றங்களைக் காணாமல் இருப்பதற்கான காரணம் என்ன?**

ப: அமலன் 'எல்லோரும் உலகை மாற்ற நினைக்கின்றார்களே தவிர தன்னை மாற்ற யாரும் தயாராய் இல்லை' என்ற லியோ டால்ஸ்டாயின் அவதானிப்புக் காரணமாக இருக்கும் என நம்புகின்றேன்.

(நிலா - யாழ்ப்பாணம்)

**கேள்வி: பெண்கள் எப்படி ஆடை அணியவேண்டும் என்பது பெண்களாகிய எங்களுடைய சுதந்திரம். ஆனால் நாங்கள் எப்படி ஆடை அணிய வேண்டும் என ஆண்கள் கட்டுப்பாடுகளைப் போடுவது சரியா! உங்கள் பதிலென்ன?**

ப: நிலா, சரியா பிழையா என்பதற்கப்பால் பொதுவாகப் பெண்கள் ஆடை அணியும் போது கவனிக்கவேண்டிய விடயம் ஒன்றுண்டு! அதனை உலகப் புகழ்பெற்ற மறைந்த அமெரிக்க குத்துச் சண்டை வீரர் முஹம்மது அலியின் வாழ்க்கைச் சம்பவத்தில் இருந்து கற்றுக்கொள்ளலாம். அவரது மகள் தன் தந்தையைச் சந்திப்பதற்காக வீட்டிற்கு வந்தபோது, மகள் ஹனாவின் ஆடை சிறிது கவர்ச்சியாக இருந்துள்ளது. இப்பின் புலத்தில் முஹம்மது அலி தன் மகளுக்கு எப்படி அறிவுரை கூறியுள்ளார் என்பதை அவரின் மகள் ஹனா வெளியிட்டுள்ளார். அவளே கூறுகின்றாள்: "நானும், எனது தங்கை லைலாவும் தந்தையின் அறைக்குச் சென்றோம். வழக்கம் போல் தந்தை கதவிற்குப் பின்னால் ஒளிந்துகொண்டு எங்களைப் பயமுறுத்துவது போல் நின்றார். நாங்கள் உள்ளே சென்றவுடன் எங்களை ஆரத் தழுவி முத்தமிட்ட பின்பு, அவர் எங்களை உற்றுப் பார்த்தார். எங்கள் அருகில் அமர்ந்துகொண்டு என் கண்களை நோக்கி நேராகப் பார்த்துக் கூறினார். 'ஹனா! இந்த உலகில் மிகவும் மதிப்பு மிக்கதாக இறைவன் படைத்த அனைத்தும் மறைக்கப்பட்டவையாகவும் இன்னும் பெறுவதற்கு மிகக் கடினமானதாகவும் தான் உள்ளது. வைரங்களை எங்கு எடுப்பாய்? பூமியின் ஆழமான பகுதியில் மறைக்கப்பட்டதாகவும் பாதுகாக்கப்பட்டதாகவும் தான் வைரங்கள் உள்ளன. முத்துக்களை எங்கு எடுப்பாய்? கடலின் ஆழமான பகுதியில் அழகான சிப்பிக்குள் மறைக்கப்பட்டதாகவும் பாதுகாக்கப்பட்டதாகவும்தான் முத்துக்கள் உள்ளன. தங்கத்தை எங்கு எடுப்பாய்? சுரங்கத்தினுள்ளே, அடுக்கடுக்கான பாறைகளின் உள்ளே மறைக்கப்பட்ட நிலையில் அதை எடுப்பதற்கு நீ மிக கடினமாக உழைக்க வேண்டும் என்றவர்" என் கண்களைக் கூர்ந்து உற்று நோக்கியவராக "உன்னுடைய உடல் புனிதமானது. வைரங்கள், முத்துக்களைவிட நீ புனிதமானவள். உன் உடலை முறையாக நீ மறைத்துக்கொள்ள வேண்டும்!" என்றார். இதிலிருந்து உங்களுக்கு என்ன புரிகின்றது நிலா? பொக்கிசங்களை பொத்தி மட்டுமல்ல புனிதமாக வைத்திருக்கவேண்டும் என்று புரிகின்றதுதானே நிலா!?

# தனிநாயகம்.....

(06ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவராக இருந்து செயற்பட்டார். அதன் முதல் மாநாட்டினை 1966 ஏப்ரல் 16-25 ஆம் திகதிகளில் மலேசிய அரசின் துணையோடு மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் கோலாகலமாக நடத்தினார். பின்னர் சென்னையில் நடந்த இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தனிநாயகம் அடிகளார் வீரத் துறவியாகவும் எம் மத்தியில் எழுந்து நிற்கின்றார். 1956 ஆம் ஆண்டு தனிச் சிங்கள மொழிச் சட்டத்தை எதிர்த்து தமிழ் அரசியல் கட்சிகள் கொழும்பு காலிமுகத்திடலில் அறப்போர் நடத்தியபோது அடிகளார் தாம் மதகுரு என்பதையும் பொருட்படுத்தாது, தமிழ் இரத்தம் ஓடும் மக்களோடு மக்களாக தன் தமிழ்த்தாய் மட்டில் தனயனுக்குள்ள பாசத்தை, பற்றைக் காட்ட அன்று அந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்கு கொண்டமை உலகத் தமிழினம் அவரை ஒரு வீரத் துறவியாகப் பார்க்க வைத்தது.

இறைவன் எமக்கு இலவசமாக அளித்த அனைத்தையும் நன்றியுடன் ஏற்று, பெருமையுடன் மதித்து அவைகளின் வளர்ச்சிக்கு அடிகளார் பணி செய்தது மாத்திரமன்றி, தமிழ் மொழி, கலாசாரம் சர்வதேச கவனத்தையும் ஏற்று சர்வதேச ரீதியில் வளரவும், வளர்க் கப்படவும் தேவையான அமைப்புக்களுக்கு அத்திவாரக் கற்களை நாட்டி வைத்தார்.

அடிகளார் போராதனைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த போது கண்டி தமிழ்ப் பண்பாட்டுச் சங்கம் ஊடாக 'நம் மொழி உரிமைகள்' எனினும் தலைப்பில் வெளியிட்ட நூலில் விடுதலையைத் தேடி வனாந்தரத்தில் நடந்த இஸ்ராயேலருக்கு மோயீசன் இறைவனின் பத்துக் கற்பனையை முன் வைத்தது போல தமிழ் பேசும் இனத்தவருக்கு அடிகளார் பத்து வேண்டுகோள்களைத் தெளிவாக எழுதி வைத்தார். அந்த வேண்டுகோளைச் சரியான முறையில் ஜீரணித்து தமிழினம் பயணத்திருந்தால் எம் பாதையில் முட்களுக்குப் பதில் மலர்கள் மணம் பரப்பியிருக்கும். ஆனால், நாம் அதிலிருந்து தவறிவிட்டோம். தொடர்ந்தும் தவறிழைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதே வெளிப்படையான உண்மை.

தனிநாயகம் அடிகளார் எல்லைகள் கடந்து தமிழ் செய்தார். 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற பரந்த உலக மனப்பான்மை, விருந்தோம்பல், பிறரன்பு, ஈகை, தனக்கென வாழா பிறருக்குரியாளன் எனும் கோட்பாடு. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' 'ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்', மானம் என்றால் உயிரைக் கொடுத்துக் காப்பாற்றும் வேட்கை, மனத் தூய்மை, விடாது முயலல், 'யான் பெற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற நிகரற்ற மனநிலை 'உள்ளதெல்லாம் உயர்வுள்ளல்' எனும் உயர்ந்த இலட்சி யம்.

புறமுதுகில் புண்படா வீரச் சிறப்பு என்பன தமிழர் பண்பாட்டில் அரிய சில கோட்பாடுகள் எனத் தமிழர் பண்பாடு தொடர்பாக அடிகளார் எழுதிய கட்டுரையில் தமிழரது வாழ்வியலைத் தெளிவுபடக் காட்டி நிற்கின்றார். தனிநாயகம் அடிகளார் எம்மீது விதைத்து விட்டுச்சென்ற தமிழர் பண்பாடுகளையும், பாரம் பரியங்களையும் தமிழினம் பின் பற்றி வாழ்கிறதா? என்பது வினாக்களாகவே தொடர்கின்றது.

உலகின் தலைசிறந்த வாழ்வியல் பாதையைக் கடந்து வந்த தமிழினத்தின் இன்றைய நிலை 'தாளம் தவறுமோ தறிபடுமோ' என்ற நிலையில் சென்று கொண்டிருக்கிறது. தமிழ் செய்த நவீன திருமூலரான தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளார் வழியில் தமிழ் செய்தல் என்ற சொல்லாட்சி கொண்டு தமிழ் மொழியையும், தமிழர் தம் வாழ்வியல் பண்பாடுகளையும் இன்று செயல் வடிவில் செப்பனிட முயன்றால் குடதிசையில் சாயும் தமிழினம் குணதிசையில் நிமிர்வதற்கு வழிபிறக்கும்.

'தமிழ் பக்தியின் மொழி என்று நான் அடிக்கடி கூறி வருகின்றேன். ஏனெனில், தமிழில் உள்ள பக்தி இலக்கியங்களைப் போல அழகிலும் ஆழத்திலும் பரப்பிலும் இத்துணை இலக்கியம் வேறு எந்த மொழியிலும் இருப்பதாக நான் அறியேன்' என்ற தனிநாயகம் அடிகளாரது கனவை மெய்ப்படுத்தி, பக்திக்குரிய மொழிகளைத் தமிழைப் பக்தியுடன் போற்றி தமிழர் பண்பாடுகளையும் பின்பற்றி தமிழாய், தமிழனாய், தமிழுக்காய் தரணியில் தலை நிமிர்வோம்.


# நீங்காத நினைவுகள்

## 4ம் ஆண்டு நினைவு

அன்னையின் மடியில் 30 . 04 . 1946
ஆண்டவன் அடியில் 17 . 10 . 2020



அமரர்
**யோசப்பின் தேவநாயகம்**

நீர் தேர்ந்தெடுத்து உம் அருகில் வைத்துக்
கொள்ளும் மனிதர் பேறு பெற்றோர் (தி.பா. 65:4)

பத்து மாதம் சுமந்தெம்மை - பாசத்தால் நனைத்தவளே
பாலைவனம் போலுள்ளம்
பசுமையின்றித் துடிக்கின்றதே
நான்கு ஆண்டுகள் கடந்தாலும்
நினைவுள் நீங்காதே
உன் அன்பு சுவாசமாக
இதயத்தில் இன்றும் மணக்கிறதே

மணமுடித்து நாற்பத்தெட்டு - ஆண்டுகள் பிரிந்தாலும்
உன் மடியில் அமர்ந்தது போல்
மனம் இன்று உணர்கின்றதே
உன் வார்த்தைகள் என்
கனவுகளில் வீசும் தென்றலாய்
உன் ஆசீர்வாதங்கள்
எங்கள் வாழ்வில் ஒளியாய் வழிகாட்டுகின்றதே

## 10ம் ஆண்டு நினைவு

அன்னையின் மடியில் 17 . 03 . 1933
ஆண்டவன் அடியில் 01 . 11 . 2014



அருட்சகோதரி
**மேரி பிறிசில்லா போல்**

திருக்குடும்ப அ.பொ. : 18.12.1954

'எனக்குரிய நீதி ஆண்டவரிடம் உள்ளது : என்
பணிக்கான பரிசு என் கடவுளிடம் இருக்கின்றது' (எசா 49 : 4)

தூக்கி வளர்த்த அன்பு அக்காவே
பத்தாண்டுகள் கடந்து போனாலும்
அருந்தேனாய் உங்கள்
நினைவுகள் பொங்கி வரும்
அறுபது ஆண்டுகள்
துறவற வாழ்வில்
ஜுபிலி கொண்டாடிய
திருக்குடும்பக் கன்னியராய் சேவை செய்து
மக்கள் பணியில் உம் அருள் உள்ளம்
ஏழைகள் நெஞ்சில் பேரன்பாய் வழிந்தது
இறையடியில் அமைதியில் நீங்கள்
என்றும் இருப்பீர்கள் எம் அன்பு அக்காவாய்

**நித்திய வாழ்வில் எங்களுக்காக இறைவனை மன்றாடும்.**

பாசமிகு தம்பி
போல்தேவநாயகம்

போல் தேவநாயகம்
4A அச்சுக்கூட வீதி, யாழ்ப்பாணம்

பாசமிகு கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

AD-51

## யாழ் பல்கலைக்கழகப் பொன்விழா



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட பொன்விழா நிகழ்வும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கத்தோலிக்க மாணவர் ஒன்றியத்தின் பொன்விழா நிகழ்வும் கடந்த 06 ஆம் திகதி அன்று வெகுசிறப்புற நடந்தேறியது.

## சண்டிலிப்பாய் புனித தெரேசா ஆலய வருடாந்தத் திருவிழா



பண்டத்தரிப்புப் பங்கின் துணை ஆலயமான சண்டிலிப்பாய் புனித சின்னத் தெரேசா ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத் தந்தை அருட்தந்தை யேசுதாஸ் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் கடந்த29ஆம் திகதி நடைபெற்றது.

26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்த நாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 28ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை குயின்சன் அவர்களும் நற்கருணைவிழா திருப்பலியை சில்லாலை பங்குத்தந்தை அருட்தந்தை பிராயன் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக் கொடுத்தனர்.

## புனித வின்சன்ட் டி போல் திருவிழாவும், சபையின் 41ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டமும்



யாழ். மறைமாவட்ட புனித வின்சன்ட் டி போல் மத்திய சபையால் முன்னெடுக்கப்பட்ட புனித வின்சன்டி போல் திருவிழாவும் சபையின் 41ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் 29ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. ஆன்ம ஆலோசகர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அவர்கள் கலந்து திருவிழா திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலி நிறைவில் பதிவுசெய்யப்பட்ட பந்திகளுக்கான சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டதுடன் தொடர்ந்து பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், மத்திய சபை உறுப்பினர்கள், பந்திகளின் அங்கத்தவர்களென 400 வரையானவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

## தாளையடி புனித வேளாங்கண்ணி அன்னை சிற்றாலய வருடாந்தத் திருவிழா



தாளையடி கடற்கரை புனித வேளாங்கண்ணி அன்னை சிற்றாலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை ஆதர் யஸ்ரின் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது.

திருவிழா த் திருப்பலியை அமலமரித் தியாகிகள் அருட்தந்தை இம் மானுவேல் அவர்கள் தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்ததுடன் திருப்பலி நிறைவில் இவ் வருடம் நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மற் றும் மறைக்கல்விப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது.

## தர்மபுரம் பங்கில் முதல்நன்மை அருட்சாதனம்



தர்மபுரம் புனித சவேரியார் ஆலயத்தில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை நிக்ஸன் கொலின் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.அருட்தந்தை இருதயதாஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியில் 08 சிறார்கள் முதல் நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

## நாரந்தனைப் பங்கில் மறைக்கல்வி வார சிறப்புச் செயற்பாடுகள்



நாரந்தனைப் பங்கில் மறைக்கல்வி தினத்தை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகள் மாணவர்களின் அறிவு, ஆளுமை விருத்திக்காக மேற்கொள்ளப்பட்டன. தரம் 1 முதல் 11 வரையான மாணவர்களுக்கான சிறப்புக் கருத்தமர்வும் பாசறையும் புனித கிளாரட் அகத்திலே மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து மாணவர்களுக்கான சிறப்புச் சுற்றுலா ஒழுங்கமைக்கப்பட்டது.

மாணவர்களுக்கான சிறப்பு மறைக்கல்விப் பரீட்சைகள் மேற்கொள்ளப்பட்டுப் பரிசில்கள் வழங்கப்பட்டன. மறைக் கல்வி தின திருப்பலி சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு, மாணவர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்டார்கள். திருப்பலி நிறைவிலே மாணவர்களுக்கான மகிழ்வூட்டும் ஒன்றுகூடலும், சிற்றுண்டிப் பரிமாற்றமும் நடைபெற்றன.

## நாரந்தனை இளையோர் மன்றத்தினரின் சமூக அக்கறை



நாரந்தனை புனித பேதுரு பவுல் ஆலய இளையோர் மன்றத்தினர், தமது வருடாந்த செயற்திட்டங்களில் ஒரு செயற்திட்டமாக, உடுவிலில் அமைந்துள்ள மாற்றுத் திறனாளிப் பிள்ளைகளைப் பராமரிக்கும் 'ஆர்க்' இல்லத்திற்குச் சென்று பிள்ளைகளைப் பார்வையிட்டு அவர்களோடு மகிழ்வூட்டும் நிகழ்வுகளில் ஈடுபட்டனர்.

அத்தோடு அவர்களுக்குத் தேவையான பொருட்களை நாரந்தனைப் பங்கு மக்களிடமிருந்து சேகரித்து வழங்கினர். இந்த அனுபவம் பிறர் மீதான அக்கறையையும் அன்பையும் வளர்ப்பதற்குப் பேருதவியாக இருந்ததோடு, ஒரு பரந்த சமூகப் பார்வையையும் பெறுவதற்குப் பேருதவியாக இருந்தது.

## குளமங்கால் பங்கு இளையோர்களுக்கான சுற்றுலா




தேசிய இளையோர் தினத்தை முன்னிட்டு குளமங்கால் பங்கு இளையோரால் முன்னெடுக்கப்பட்ட அனுபவச் சுற்றுலா கடந்த 27, 28, 29ஆம் திகதிகளில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை பாஸ்கரன் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இளையோர் கண்டி, நுவரெலியா, பதுளைப் பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள பிரசித்திபெற்ற இடங்களை பார்வையிட்டனர்.

## தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட உடற்பயிற்சிப் போட்டி



பாடசாலைகளுக்கிடையே தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட உடற்பயிற்சி போட்டி கடந்த 28, 29ஆம் திகதிகளில் குருநாகல் மாலியதேவா பெண்கள் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. 15 ஆண்கள் அணிகளும் 14 பெண்கள் அணிகளும் பங்குபற்றிய இப்போட்டியில் ஆண்கள் அணியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அணி முதலாம் இடத்தைபெற்று சம்பியன்பட்டத்தை வென்று தங்கப் பதக்கத்தையும் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அணி இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் வென்றன.

அத்துடன் பெண்களுக்கான போட்டியில் கரம்பொன் சிறிய புஸ்பம் மகளீர் மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தை பெற்றுப் வெண்கலப்பதக்கத்தையும் இளவாலை திருக் குடும்பக்கன்னியர் மட மகா வித்தியாலயம் நான்காம் இடத்தையும் பெற்றுக்கொண்டன.

## பரந்தன் பங்கில் இளையோருக்கான சிறப்பு நிகழ்வு



பரந்தன் பங்கில் இளையோர் ஒன்றியத்தை மீள் உருவாக்கம் செய்யும் நோக்கோடு முன்னெடுக்கப்பட்ட இளையோருக்கான சிறப்பு நிகழ்வு கடந்த 29 ஆம் திகதி பரந்தன் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

பரந்தன் பங்குத் த்தந்தை அருட்தந்தை பெனற் அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இணைப் பாளர் அருட்தந்தை செபஜீவன் அவ ர்களின் தலை மையில் திருப்பலியும் தொடர்ந்து இளையோர்களுக்கான கருத்தமர்வும், உடையார்கட்டு இளையோர் ஒன்றிய பிரதிநிதிகளின் அனுபவ பகிர்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் உடையார்கட்டுப் பங்கைச்சேர்ந்த இளையோர்களும் பங்குபற்றினர்.

## யாழ் புனித மரியன்னை பேராலய முன்பள்ளி மாணவர்களின் விளையாட்டு நிகழ்வு



யாழ்ப்பாணம் புனித மரியன்னை பாலர் பாடசாலையில் முன்னெடுக்கப்பட்ட விளையாட்டு நிகழ்வு கடந்த 30ஆம் திகதி பேராலய வளாகத்தில் நடைபெற்றது. முன்பள்ளி ஆசிரியர் திருமதி. நிலான்குமார் தமிழ்ச் செல்வி அவர்களின் ஒழுங்குபடுத்தலில் காப்பாளர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். கல்வி வலய முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. கந்தையா விமலநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் சித்த ஆயுள்வேத வைத்திய அதிகாரிகளான திரு. திருநாவுக்கரசு ராகுலன் மற்றும் திருமதி. தர்சினி சிவகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் யாழ். கல்வி வலய முன்பள்ளி இணையாளர் செல்வி. புனித சீலன் தர்சினி அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2024ம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.